# கோவிட்-19 தடுப்பூசி விவரம் அட்டை/ MyIR Mobile அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

தடுப்பூசி விவரம்**அட்டை என்றால் என்ன?**
ஒரு தடுப்பூசி விவரம் அட்டை(Vax Card) என்பது உங்கள் கோவிட்-19 தடுப்பூசியின் பணித்துறைக்குரி பதிவு. தடுப்பூசி போடும் நேரத்தில், உங்கள் COVID-19 தடுப்பூசி தேதி (கள்) மற்றும் பிராண்டுடன் Centers for Disease Control and Prevention {(CDC)நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் } யிலிருந்து ஒரு கார்டைப் பெற்றிருக்க வேண்டும். நீங்கள் ஒரு கார்டைப் பெறவில்லை அல்லது அதை இழந்திருந்தால், உங்களுக்கு தடுப்பூசி போடப்பட்டதை நிரூபிக்க வேறு வழிகள் உள்ளன (கீழே உள்ள கேள்விகள் மற்றும் பதில்களைப் பார்க்கவும்).

**தடுப்பூசியின் பணித்துறைக்குரிய பதிவாக என்ன இருக்கிறது?**
தடுப்பூசியின் பணித்துறைக்குரிய பதிவுகளின் எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

- ஆயுள் காலம் நோய்த்தடுப்பு பதிவு /CDC கோவிட்-19 தடுப்பூசி விவரம் அட்டை
- வாஷிங்டன் மாநில நோய்த்தடுப்பு தகவல் அமைப்பு (Immunization Information System) அச்சு நகல்
- MyIR (ஆங்கிலம் மட்டும்) அச்சு நகல் (ஸ்கிரீன் ஷாட் அல்லது நோய்த்தடுப்பு நிலை சான்றிதழ்)
- My IRமொபைல் (ஆங்கிலம் மட்டும்) COVID-19 தடுப்பூசி சான்றிதழ்
- உங்கள் மருத்துவ வழங்குநரிடமிருந்து சரிபார்க்கப்பட்ட மின்னணு மருத்துவ பதிவுஅச்சு நகல்

உங்களது சொந்த தடுப்பூசி விவரம் அட்டையை உங்களால் உருவாக்க முடியாது, ஏனெனில் இது பணித்துறைக்குரிய பதிவாக ஏற்றுக்கொள்ளப்படாது. பணித்துறைக்குரிய பதிவுகள் தடுப்பூசி நேரத்தில், உங்கள் மருத்துவ வழங்குநர் மூலமாகவோ அல்லது மேலேபட்டியலிடப்பட்டுள்ள MyIR சேவை இணையதளங்கள் மூலமாகவோ பெறப்பட்ட மருத்துவ ஆவணங்கள்.

**எனது தடுப்பூசி விவரம் அட்டையை எவ்வாறு சேமிக்க வேண்டும்?**
உங்கள் தடுப்பூசி விவரம் அட்டையை பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்க வேண்டும்! இது உங்கள் பிறப்புச் சான்றிதழ் அல்லது பாஸ்போர்ட் என நினைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அதன் புகைப்படம் எடுக்கலாம், ஒரு நகலை உருவாக்கலாம், நகலை லேமினேட் செய்யலாம் (ஆனால் அசலை அல்ல), அல்லது அதன் நகல்கள் உங்களிடம் உள்ளதா என்பதை உறுதிப்படுத்த பிற நடவடிக்கைகளை எடுக்கலாம்.

உங்கள் தடுப்பூசி விவரம் அட்டையை முறையாகக் கையாள்வது குறித்த கூடுதல் உதவிக்குறிப்புகளுக்கு, இதை நீங்கள் குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் பகிர்ந்து கொள்ளலாம். உங்கள் மொழிக்கான ஃப்ளையருக்கு (Flyer) இங்கே கிளிக் செய்க: (தற்போது ஆங்கிலத்திலும் ஸ்பானிஷிலும் கிடைக்கிறது.).

**எனது தடுப்பூசி விவரம் அட்டையை நான் ஏன் வைத்திருக்க வேண்டும்?**
உங்கள் தடுப்பூசி விவரம் அட்டையானது, நீங்கள் COVID-19 க்கு எதிராக தடுப்பூசி போட்டதற்கான ஆதாரத்தைக் காண்பிப்பதற்கான எளிய வழியாகும். நீங்கள் பயணம் செய்ய, சில நிகழ்வுகளில் கலந்து கொள்ள, மற்றும் எதிர்காலத்தில் பூஸ்டர் டோஸ் தகவல்களைச் சேர்க்க தடுப்பூசிக்கான ஆதாரத்தை நீங்கள் காட்ட வேண்டியிருக்கலாம்.

பல வாஷிங்டன் வணிகங்களும் இப்போது முழு தடுப்பூசிக்கான சரிபார்க்கப்பட்ட ஆதாரங்களை வழங்குபவர்களுக்கு சலுகைகளை வழங்குகின்றன. இதில் தள்ளுபடிகள், இலவசங்கள் அல்லது நிகழ்வுகளுக்கு விருப்பமான இருக்கை ஆகியவை உள்படலாம்.

**நான் தடுப்பூசி பெறும்போது எனக்கான தடுப்பூசி விவரம் அட்டை கிடைக்கவில்லை என்றால் நான் என்ன செய்வது?**
நீங்கள் COVID-19 தடுப்பூசி (கள்) போட்டுக்கொள்ளும்போது உங்களுக்கு ஒரு தடுப்பூசி விவரம் அட்டை கிடைக்கவில்லை என்றால், உங்கள் தடுப்பூசி வழங்குநரைத் தொடர்பு கொள்ளலாம். உங்கள் COVID-19 தடுப்பூசி பதிவுகளை ஆன்லைனில் www.MyIRMobile.com (ஆங்கிலம் மட்டும்) இல் அணுகலாம் மற்றும் இலவச கணக்கை அமைக்கலாம்.

**எனது தடுப்பூசி விவரம் அட்டையை இழந்தால் நான் என்ன செய்வது?**
உங்கள் தடுப்பூசி விவரம் அட்டையை நீங்கள் தொலைத்திருந்தால், உங்கள் சுகாதார வழங்குநர் மூலமாகவோ அல்லது www.MyIRMobile.com (ஆங்கிலத்தில் மட்டும்). இல் ஒரு கணக்கை அமைப்பதன் மூலமாகவோ COVID-19 தடுப்பூசிக்கான அதிகாரப்பூர்வ ஆதாரத்தைப் பெறலாம்.

**MyIR Mobileஎன்றால்என்ன?**
MyIR Mobile என்பது இணைய அடிப்படையிலான போர்டல் ஆகும், இது மக்களுக்கு அவர்களின் பணித்துறைக்குரிய மாநில தடுப்பூசி பதிவுகளை அணுக உதவும். நீங்கள் www.MyIRMobile.com இல் ஒரு கணக்கை அமைக்கலாம் (ஆங்கிலம் மட்டும்).

MyIR Mobile தற்போது ஆங்கில மொழியில் மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்க. மொழி உதவி அல்லது உங்கள் பதிவுகளைப் பெறுவதற்கான கூடுதல் உதவிக்கு, வழக்கமான வணிக நேரங்களில் (360) 236-3595 என்ற எண்ணில் வாஷிங்டன் மாநில Office of Immunization and Child Profile (நோய்த்தடுப்பு மற்றும் குழந்தை சுயவிவர) அலுவலகத்தையும் அழைக்கலாம் அல்லது waiisrecords@doh.wa.gov. என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளலாம்.

**எனது குழந்தையின் கோவிட்-19 தடுப்பூசி பதிவை எவ்வாறு பெறுவது?**
தடுப்பூசி போடும்போது உங்கள் பிள்ளைக்கு அவர்களின் சொந்த CDC தடுப்பூசி விவரம் அட்டை கிடைத்திருக்க வேண்டும். நீங்கள் உங்கள் சொந்த கார்டைப் பாதுகாத்து வைத்ததைப் போலவே இந்த அட்டையையும் அவர்களுக்காக பாதுகாப்பாக சேமிப்பது நல்லது. மேலே உள்ள பட்டியலில் சேமிப்பக விருப்பத் தேர்வுகளைக் காண்க.

உங்கள் பிள்ளைக்கு CDC தடுப்பூசி விவரம் அட்டை இல்லையென்றால், அவர்களின் குழந்தை மருத்துவர் அல்லது தடுப்பூசி வழங்குநர் மூலம் அதிகாரப்பூர்வ நகலைப் பெறலாம். நீங்கள் www.MyIRMobile.com (ஆங்கிலம் மட்டும்) இல் ஒரு குடும்பக் கணக்கையும் அமைக்கலாம் மற்றும் உங்கள் குழந்தையின் சுயவிவரத்தை உங்கள் சொந்தமாகச் சேர்க்கலாம்.

**வாஷிங்டன் மாநிலத்திற்கு வெளியே எனக்கு தடுப்பூசி போடப்பட்டால் என்ன செய்வது?**
நீங்கள் வாஷிங்டன் மாநிலத்தில் தடுப்பூசி போடவில்லை என்றால், உங்கள் தடுப்பூசி பதிவுகள் MyIR மொபைலில் பிரதிபலிக்காமல் இருக்கலாம் உங்கள் CDC தடுப்பூசி விவரம் கார்டு அல்லது உங்கள் சுகாதார வழங்குநரின் மூலம் சரிபார்க்கப்பட்ட பிற பதிவுகள் போன்ற COVID-19 தடுப்பூசிக்கான சரிபார்க்கப்பட்ட பிற ஆதாரங்கள் உங்களிடம் உள்ளதா என்பதை உறுதிப்படுத்தவும்.

நீங்கள் அமெரிக்காவில் தடுப்பூசி போடவில்லை என்றால், உங்கள் நாட்டிலிருந்து தடுப்பூசி போட்டதற்கான பணித்துறைக்குரிய ஆதாரத்தை எடுத்துச் செல்லுங்கள்.

**எனக்கோ அல்லது எனது குடும்பத்தினருக்கோ (COVID-19 தடுப்பூசி மட்டுமல்ல) எனது தடுப்பூசி பதிவுகள் அனைத்தையும் எவ்வாறு பெறுவது?**
உங்களுக்காக அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கான தடுப்பூசி பதிவுகளின் முழு பட்டியலுக்காக, உங்கள் முதன்மை சுகாதார வழங்குநரைத் தொடர்பு கொள்ளலாம் அல்லது wa.MyIR.net இல் ஒரு கணக்கை அமைக்கலாம் (ஆங்கிலம் மட்டும்).

மொழி உதவி அல்லது உங்கள் ஆவணங்களைப் பெறுவதற்கான கூடுதல் உதவிக்கு, 360-236-3595 என்ற எண்ணுக்கு வழக்கமான பணி நேரங்களில் வாஷிங்டன் மாநில Office of Immunization and Child Profile(நோய்த்தடுப்பு மற்றும் குழந்தை சுயவிவர அலுவலகம்) என்பதையும் அழைக்கலாம் அல்லது waiisrecords@doh.wa.gov ஐ மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

Washington State Department of Health

DOH 348-819 June 2021
இந்த ஆவணத்றத நவகைாரு வடிவத்தில் நகார, 1-800-525-0127 ஐ அறழக்கவும். காது நகளாதவர்அல்லது நகட்பதைக்கு ்சிரமப்படும்வாடிக்றகயாளர்கள், தயவுக ய்து 711 அறழக்கவும் (Washington Relay (ஆங்கிலம்)) civil.rights@doh.wa.gov முகவரிக்கு மின்னஞ் ல்அனுப்பவும்.